(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr -12 (2023) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- ***1* தொடக்கம் *20* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் *(1), (2), (3), (4), (5)* என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

### பகுதி - I


01) பொருளாதார நடத்தையின் **பிரதான நோக்கம்** பின்வருவனவற்றுள் எது?

1) உச்ச இலாபத்தினை உருவாக்குதல்
2) தேவைகள், விருப்பங்களை திருப்திப்படுத்தல்
3) பொருளாதார வினைத்திறனை அடைதல்
4) அருமையான வளங்களைச் சேமித்தல்
5) கொள்வனவாளரின் வருமானத்தை அதிகரித்தல்

02) **பொருளியலாளர் கருத்தின்படி** ஒரு **நிலம்** என்ற உற்பத்திக் காரணியாக கருதப்படக்கூடியது. பின்வருவனவற்றுள் எது?

1) ஓர் உழவு இயந்திரம் 2) இரசாயன உரங்கள் 3) கடலில் உள்ள மீன்கள்
4) ஒரு விவசாயி 5) ஒரு வாகனச் சாரதி

03) ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வரம்பெல்லை வருமாறு.




தரப்பட்ட கால்ப்பகுதியில் பொருளாதாரம் பொருள் மற்றும் சேவை தொடர்பாக உற்பத்தி செய்யக் கூடிய சேர்க்கைகளை புலப்படுத்தும் விடையினை (1), (2),(3),(4) மற்றும் (5) இல் இருந்து. தெரிவு செய்க.


1) W மட்டும் 2) W, Y மட்டும் 3) Y, W மற்றும் X மட்டும்
4) V, W, மற்றும் X மட்டும் 5) V, W, X மற்றும் Y

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**04)** கலப்புப் பொருளாதார முறைமையிலிருந்து சந்தைப் பொருளாதார முறைமையானது பின்வரும் எவ் வழியில் **வேறுபடுகின்றது.**

1) வளங்களை ஒதுக்கீடு செய்வதில் ஒரு சிலர் சிறந்த முறையிலும் மற்றும் சிலர் சிறப்பற்ற முறையிலும் ஒதுக்கீடு செய்தல்.
2) வளங்கள் தனியாருக்கு சொந்தமாக இருப்பதுடன் அது விலைப்பொறிமுறையூடாக ஒதுக்கீடு செய்யப்படும்.
3) தொழில் நிறுவனங்கள் மக்களுக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்யும் அதாவது ஆடம்பர பொருட்களை தவிர்த்து அத்தியாவசியப் பொருட்களுக்கு முக்கியம் கொடுக்கும்
4) வரி மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு வீதிகள், கல்வி என்பன அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும்
5) வளங்கள் எப்பொழுதும் அரசாங்கத்தினால் மட்டும் ஒதுக்கீடு செய்யப்படும்.

05) சாதாரண பண்டம் ஒன்றின் கேள்வி (D), நிரம்பல் (S) கோடுகளை கீழ்வரும் வரைபு காட்டுகிறது.





மேலே உள்ள வரைபில் கேள்விக்கோடு $D_1 - D_2$ என நகர்வடைவதற்குக் காரணமாக அமைவது

1) நெருங்கிய பதிலீட்டுப் பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு
2) நிரப்புப் பண்டத்தின் விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
3) எதிர்காலத்தில் இப்பண்டத்தின் விலை குறைவடையும் என நுகர்வோன் எதிர்பார்த்தல்
4) கொள்வனவாளர்களின் வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
5) கொள்வனவாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட பாரிய குறைவு

06) கீழே தரப்படுவற்றுள் எது விமானப் பயணத்திற்கான கேள்விக்கும் விமானஓட்டிகளின் கேள்விற்கும் இடையிலான தொடர்பினை புலப்படுத்துகின்றது.

1) கலப்பு கேள்வி
2) வருவிக்கப்பட்ட கேள்வி
3) கலவைக்கேள்வி
4) இணைப்புக்கேள்வி
5) நேர்க்கேள்வி

07) கீழே தரப்படும் வரைபடமானது மாட்டிறைச்சிக்கான கேள்வி, நிரம்பல் கோட்டினை புலப்படுத்துகின்றது. ஆரம்ப சமநிலை விலை ***ரூ.25*** ஆகும்.





கீழேதரப்பட்டுள்ள சேர்க்கைகள் (1),(2),(3),(4) மற்றும் (5) இல் எது மிகவும் சரியானது

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

| | மாட்டிறைச்சியின் விலை குறையக் காரணம் | விலை 20 ரூபாவிலிருந்து 25 ரூபாவாக அதிகரிக்கும் போது விலைசார் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1) | விலங்குகளுக்கு வழங்கும் உணவுகளுக்கான விலையில் ஏற்படும் அதிகரிப்பு | மறை ஒன்றிற்கும் மறை முடிவிலிக்கும் இடையில் |
| 2) | விவசாயத் தொழிலாளிகளின் சம்பளத்தில் ஏற்படும் குறைவு | மறை ஒன்றிற்கும் பூச்சியத்திற்கும் இடையில் |
| 3) | விவசாய நிலங்களுக்கான வாடகையில் ஏற்படும் குறைவு | மறை ஒன்றிற்கும் மறை முடிவிலிக்கும் இடைப்பட்டது. |
| 4) | மாட்டுக் கன்றுகளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு | மறை ஒன்றிற்கும் பூச்சியத்திற்கும் இடையில் |
| 5) | விவசாய நிலங்களுக்கான வாடகையில் ஏற்படும் குறைவு | ஒன்றிற்கு சமன் |


08) இரண்டு பண்டங்களின் நிரம்பல் கோடுகள் $OS_1$ மற்றும் $OS_2$ கீழே தரப்படுகின்றது.
மேற்படி இரு பண்டங்களினதும் விலை ஏக காலத்தில் அதிகரிக்குமாயின்




1) $OS_1$ மற்றும் $OS_2$ இல் இரண்டினதும் நெகிழ்ச்சி குறைவடையும்
2) $OS_1$ ஐக் காட்டிலும் $OS_2$ இல் அதிகரிப்பது குறைவாக இருக்கும்.
3) $OS_1$ ஐக் காட்டிலும் $OS_2$ இல் அதிகரிப்பது அதிகமாக இருக்கும்.
4) $OS_1$ இலும் $OS_2$ இலும் நிலையானதாகக் காணப்படும்.
5) $OS_1$ இலும் $OS_2$ இலும் சமனான அதிகரிப்பு காணப்படும்.

09) கோதுமைத்தானியத்திற்கான **விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியானது**
1) நீண்டகாலத்துடன் ஒப்பிடுகையில் குறுங்காலத்தில் குறைந்த நெகிழ்வுடையது
2) பதிலீடுகளின் கிடைப்பனவிற்கு அமைய தீர்மானிக்கப்படும்
3) கோதுமை தானியத்தின் இருப்புக்கமைய தாக்கத்திற்கு உள்ளாகும்
4) இறக்குமதி செய்யக்கூடிய இயலுமைக்கு ஏற்ப நெகிழ்ச்சி அதிகமாக காணப்படும்
5) எப்பொழுதும் நெகிழ்ச்சி வாய்ந்ததாகக் காணப்படும்.

10) கீழே தரப்படும் வரைபானது குறித்தவொரு பண்டத்தின் கேள்வி (D), நிரம்பல் (S) கோட்டினைப் புலப்படுத்துகின்றது. இப்பண்டம் சமூகத்திற்கு தீங்கினை விளைவிக்ககூடியது.




நுகர்வினையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்துவதற்கும் $OQ_2$ மட்டத்தில் அதனைப் பேணுவதற்கும் அரசு தீர்மானித்து **அரசுதலையீடு செய்யுமாயின்**
1) குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாக $OP_3$ அமையும்
2) உற்பத்தி மீதான வரி $P_2 – P_3$ ஆக தீர்மானிக்கும்
3) ஆகக்கூடிய விற்பனை விலையாக $OP_2$ அமையும்
4) உற்பத்தி மீதான வரி $P_2$-$P_1$ ஆக தீர்மானிக்கப்படும்
5) உற்பத்தி மீதான வரி $P_3 – P_1$ ஆகத் தீர்மானிக்கப்படும்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


11) குறித்த பண்டத்தின் வருடாந்த கேள்வி நிரம்பல் அட்டவணை கீழே தரப்படுகின்றது.

| விலை | 10 | 9 | 8 | 7 | 6 |
|---|---|---|---|---|---|
| கேள்வித் தொகை | 4000 | 6000 | 8000 | 10000 | 12000 |
| நிரம்பல் தொகை | 12000 | 10000 | 8000 | 6000 | 4000 |

அரசாங்கம் ஆகக்குறைந்த விற்பனை விலையாக ரூபா 9 ஐ விதிக்கின்றது எனின் அரசாங்கத்திற்கு ஏற்படும் வருடாந்த செலவு எவ்வளவு?

1) ரூபா 90000
2) ரூபா 72000
3) ரூபா 54000
4) ரூபா 36000
5) ரூபா 18000

12) ஆகக்கூடிய கட்டுப்பாட்டு விலை விதிப்பதன் நிலைமையினை கீழ்வரும் வரைபு காட்டுகின்றது. அரசாங்கம் இதனை வினைத்திறனான கட்டுப்பாட்டு விலையாக நடைமுறைப்படுத்துகின்றது எனின் நுகர்வோன்மிகை எவ்வளவு?




1) f மட்டும்
2) f + g + h மட்டும்
3) f + g + i மட்டும்
4) f + g + h + i + j + k
5) f + g மட்டும்


13) வேறுபட்ட வெளியீட்டு மட்டங்களுக்கான மொத்தச் செலவு அட்டவணை வருமாறு

| வெளியீடு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தசெலவு | 8 | 14 | 18 | 22 | 28 | 36 | 46 | 58 |

சந்தை விலை 8/= எனின் நிறைபோட்டிச் சந்தையில் உள்ள நிறுவனம் குறுங்காலத்தில் **இலாப உச்சப்படுத்தலுக்கான வெளியீட்டு மட்டத்தின் வீச்சு**.

1) 1 – 2 அலககள்
2) 3 - 4 அலகுகள்
3) 5 – 6 அலகுகள்
4) 6 – 7 அலகுகள்
5) 7 – 8 அலகுகள்

14) கீழே தரப்படும் வரைபடமானது நிறைபோட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் முட்டைக்கான கேள்வி (D) சராசரி செலவு (AC) எல்லைச்செலவு (MC) வளையிகளைப் புலப்படுத்துகின்றது.




சந்தை ஆரம்பச் சமநிலை ரூ 1.25 ஆகக் காணப்பட்டது (ஒரு பெட்டியில் 6 முட்டைகள் உள்ளடங்கியது) தற்போது ஒரு பெட்டி முட்டையின் விலை 1.50 ஆக உயர்வடைகின்றது

1) எல்லை வருமானம் ரூ 0.25 ஐ பெறும்
2) சராசரி வருமானம் 20% ஆக அதிகரிக்கும்
3) நீண்டகாலத்தில் அசாதாரண இலாபம் உழைக்கும்
4) குறுங்காலத்தில் 180 பெட்டி முட்டைகளை நாளாந்தம் விற்பனை செய்யும்.
5) குறுங்காலத்திலும் நீண்டகாலத்திலும் அசாதாரண இலாபம் உழைக்கும்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15) “மாற்றல்கட்டணத்திற்கான” வரைவிலக்கணம் பின்வருவனவற்றுள் எது?
1) நடைமுறையில் உள்ள வேலையை தொடர்ந்தும் நடத்துவதற்கு எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த கொடுப்பனவுக்கு மேலாக பெறப்படும் வருமானம்
2) நடைமுறையில் உள்ள வேலையை தொடர்ந்தும் நடத்துவதற்கு எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த கொடுப்பனவு / வருமானம்
3) வறுமைக் கோட்டிலிருந்து விடுபடுவதற்காக ஊழியர்களுக்கு வழங்கப்படும் சமூகப்பாதுகாப்பு கொடுப்பனவு
4) வேறு ஒரு தொழிலுக்கு மாறுவதன் பொருட்டு ஊழியர் எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த கொடுப்பனவு
5) நடைமுறை வேலையில் இருப்பதற்கு ஊழியர்களுக்கு வழங்கப்படும் உச்ச சம்பளம் / கொடுப்பனவு

16) **நேர்கணிய வெளியீட்டு இடைவெளியின்** போது பின்வருவனவற்றுள் எது அதிகம் சாத்தியமானது
1) உண்மை வெளியீட்டு மட்டத்தை விட சாத்திய வள வெளியீடு உயர்வாக காணப்படும்.
2) உயர் வேலையின்மை நிலவும்
3) பணவீக்கம் நிலவும்
4) ஊழியச் செலவு குறைவாக காணப்படும்
5) பணச்சுருக்கம் நிலவும்

17) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி **2020ஆம்** ஆண்டு நடைமுறைச் சந்தை விலை (US டொலரில்)
1) 80 பில்லியன் 2) 83 பில்லியன் 3) 84 பில்லியன்
4) 85 பில்லியன் 5) 88 பில்லியன்

18) குறித்த நாட்டின் தேசிய கணக்கீட்டுடன் தொடர்புடைய பேரினப் பொருளாதார தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| அடிப்படை விலைகளில் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி | ரூ 11500 |
| தேறிய முதனிலை வருமானம் | ரூ -300 |
| உற்பத்தி செய்முறை மீதான மானியம் கழித்த வரி | ரூ 800 |
| நுகர்வுச் செலவு | ரூ 8000 |

மேற்படித் தரவுகளின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி
1) ரூ 11500 2) ரூ 12000 3) ரூ 12300
4) ரூ 12900 5) ரூ 13100

19) வேறுபட்ட வருமான மட்டங்களில் தனிப்பட்ட நுகர்வு தொடர்பான அட்டவணை வருமாறு

| வருமானம் | 100 | 200 | 300 | 400 | 500 |
|---|---|---|---|---|---|
| நுகர்வு (ரூ) | 140 | 220 | 300 | 380 | 460 |

மேற்படி அட்டவணையிலிருந்து வருமானம் அதிகரிக்கும் போது எல்லை நுகர்வு நாட்டம் (MPC) சராசரி நுகர்வு நாட்டம் (APC)

| | MPC | APC |
|---|---|---|
| (1) | மாற்றமடையாது | மாற்றமடையாது |
| (2) | மாற்றமடையாது | வீழ்ச்சியடையும் |
| (3) | வீழ்ச்சியடையும் | மாற்றமடையாது |
| (4) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| (5) | அதிகரிக்கும் | மாற்றமடையாது |

20) ஒரு திறந்த பொருளாதாரத்தின் தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| C (நுகர்வு) | = 400 + 0.8yd |
| I (முதலீட்டு செலவு) | = 400 |
| G (அரச கொள்வனவு) | = 600 |
| N x (தேறிய ஏற்றுமதி) | = 400 |
| NT (தேறிய வரி) | = 100 |
| TR (மாற்றல்) | = 100 |

தன்னிச்சையான செலவுகளின் மொத்தம்
1) ரூ 800 2) ரூ 920 3) ரூ 1400
4) ரூ 1720 5) ரூ 1800

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள் :-**

- **உப பிரிவுகள் "அ" "ஆ" ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### உப பிரிவு 'அ'

01. i) தீயபண்டம்(Bad), பண்டம் (Good) பொருளாதாரப்பண்டம் (EconomicGood) பொருளாதாரமல்லாப் பண்டம் (Non – Economic Good) ஆகியவற்றை வேறுபடுத்துக. *(4 புள்ளிகள்)*

ii) "முயற்சியாண்மை" என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. *(2 புள்ளிகள்)*

iii) ஊழியப்பகுப்பு (Division of Labour) என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அது உற்பத்திச் செலவை எவ்வாறு குறைக்கின்றது என்றும் போட்டித்தன்மையை எவ்வாறு அதிகரிக்கின்றது எனவும் விளக்குக. *(5 புள்ளிகள்)*

iv) சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

v) கார் மற்றும் துப்பாக்கி ஆகிய இரண்டு பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையியில் பின்வரும் அபிவிருத்திகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை வரைபட உதவியுடன் விளக்குக.

அ) ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டமையால் துப்பாக்கி உற்பத்தியில் ஈடுபடும் ஊழியரின் வினைதிறன் அதிகரித்தது.

ஆ) பொருளாதாரப் பின்னடைவு ஒன்று ஏற்படல்

இ) ஊழியப்படையில் பெருமளவானவர்கள் நாட்டை விட்டு வெளியேறல்.

(3x2 = 6 புள்ளிகள்)

02. i) "சாதாரண பண்டம்", "இழிவுப்பண்டம்", "கிபன்பண்டம்" என்பவற்றை வேறுபடுத்துக. *(3 புள்ளிகள்)*

ii) சந்தை கேள்விக்கோடு நகர்வடைவதற்குப் பொறுப்பாக அமையக் கூடிய ஐந்து காரணிகளைப் பட்டியல்படுத்துக. *(5 புள்ளிகள்)*

iii) அ) "நிரம்பல் விதியை" விளக்குக. *(2 புள்ளிகள்)*


ஆ) நிரம்பல் கோடு ஏன் மேல் நோக்கிய சரிவுடையதாகக் காணப்படுகின்றது எனக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

iv) அ) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ஆ) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

v) சீனிக்கான சந்தை கேள்விச் சமன்பாடு $Qd = 260 - 3P$ ஆகவும் தனிநபர்/ நிறுவன நிரம்பல் சமன்பாடுகள் $Qs_A = -80 + P$, $Qs_B - 60 + P$ ஆகவும் காணப்படுகின்றது எனின் சமநிலையில் பொருளாதார மிகையை காண்க. *(4 புள்ளிகள்)*

03. i) அலகு வரி விதிக்கப்பட்ட பண்டம் ஒன்றின் சந்தை நிலைமையினை கீழ்வரும் வரைபு காட்டுகின்றது. வரைபினைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.



(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

அ) வரிக்கு முன்னரான, வரிக்குப்பின்னரான சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) வரிக்குப்பின் மொத்த மிகை (Total surplus) எவ்வளவு? (4 புள்ளிகள்)

ii) ஒரு போட்டிச்சந்தையின் கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒரு கிலோவின் விலை | 0 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 |
| கேள்வி அளவு (மில்லியல் kgs) | 120 | 100 | 80 | 60 | 40 | 20 | 0 |
| நிரம்பல் அளவு (மில்லியல் kgs) | - 40 | -20 | 0 | 20 | 40 | 60 | 80 |

அரசு 20/- வினை அலகு மானியமாக வழங்குகின்றது எனின் அரசின் மொத்த மானியச் செலவு எவ்வளவு? (4 புள்ளிகள்)

iii) தேசிப்பழத்திற்கான கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு.

Qd = 50 – 10P

Qs = -10 + 20P

P – விலை ரூபாவில்

Q – வாராந்தம் பரிமாற்றப்படும் தேசிப்பழத்தின் அளவு மில்லியன் கிலோவில்

அரசு **2. 50** ரூபாவை உத்தரவாத விலையாக விதிக்குமாயின்

அ) விவசாயிகள் எவ்வளவு அலகை தற்போது நிரம்பல் செய்வர்? (2 புள்ளிகள்)

ஆ) விவசாயிகள் தற்பொழுது நிரம்பல் செய்யும் அளவுகளால் சந்தை விலை எவ்வளவாக காணப்படும். (2 புள்ளிகள்)

இ) வாராந்தம் விவசாயிகளுக்காக அரசு செலவு செய்யும் அளவு எவ்வளவு? (2 புள்ளிகள்)

iv) உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை விதிப்பதால் **தேறிய சமூக நலன் இழப்பு** ஏற்படுவதை வரைபின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

## உப பிரிவு ‘அ’

❖ **இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

*04.* i) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி மற்றும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ii) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் தனது வெளியீட்டை மேற்கொள்ள எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த விலை எதுவாக இருக்கும்? விளக்குக. (4 புள்ளிகள்)

iii) அ) “இயற்கைத் தனியுரிமை” என்பதனை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) “பிரவேசத் தடை” என்பதனை விளக்குக. (2 புள்ளிகள்)

iv) நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறுவனம் ஒன்று “விலை ஏற்போனாக” தொழிற்படுவது ஏன்? விளக்குக. (4 புள்ளிகள்)

v) பொருளியல் இலாபம் மற்றும் மாற்றல் கட்டணம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக. (4 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05. i) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டின் போது இரட்டை எண்ணல் தவறு எவ்வாறு எழுகின்றது? அதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்? (5 புள்ளிகள்)

ii) கீழே தரப்படும் ஒவ்வொரு விடயமும் தேசிய கணக்கீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுமா? ஒவ்வொன்றையும் விளக்குக.

அ) உள்நாட்டு ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளம்

ஆ) ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியக்கொடுப்பனவு

இ) புதிய வீடு ஒன்றைக் கட்டுதல்.

ஈ) காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளல்

உ) தனியார் கம்பனி ஒன்றினால் வழங்கப்படும் பிணைகளுக்கான வட்டி

(5 புள்ளிகள்)

iii) குறித்த பொருளாதாரத்தின் தேசிய மதிப்பீட்டுடன் தொடர்புடைய தரவுகள் வருமாறு.

| விபரம் | தொகை (பில்லியன் ரூபா) |
|---|---|
| அடிப்படை விலைகளிலான மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி | 15000 |
| மானியம் கழித்த உற்பத்தி செய்முறை மீதான தேறிய வரி | 800 |
| மானியம் கழித்த உற்பத்திப் பொருள் மீதான தேறிய வரி | 500 |
| தேறிய முதனிலை வருமானம் | 400 |
| மொத்த நுகர்வு செலவு | 12000 |
| தேறிய நடைமுறை மாற்றல் | 1000 |
| நிலையான மூலதன நுகர்வு | 1000 |

மேலே தரப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு பின்வருவனவற்றை கணிக்குக.

அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஆ) தேறிய தேசிய வருமானம்

இ) மொத்த தேசிய செலவிடக் கூடிய வருமானம் (3x2 = 6 புள்ளிகள்)

iv) பொருளாதாரத்தின் பகுப்பாய்வுக்கும், மதிப்பீட்டுக்கும் தேசிய மதிப்பீடு/ கணக்கீட்டு புள்ளி விபரங்கள் சக்தி வாய்ந்த ஒரு மதிப்பீடா? விளக்குக. (4 புள்ளிகள்)

06. i) பொருத்தமான வரைபடத்தைப் பயன்படுத்தி சமநிலை தேசிய வருமானத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

ii) எல்லை நுகர்வு நாட்டத்தினதும் (MPC) எல்லைச் சேமிப்பு நாட்டத்தினதும் (MPS) கூட்டுத்தொகை எப்பொழுதும் ஒன்றிற்கு சமமானது (MPC + MPS = 1) விளக்குக. (3 புள்ளிகள்)

iii) ஒரு திறந்த பொருளாதார வருமான வட்டப்பாய்ச்சல் ஒன்றின் "உட்பாய்ச்சல்கள்" "வெளிப்பாய்ச்சல்கள்" என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

iv) பொருளாதாரப் பின்னடைவு ஒன்றினை குறைப்பதற்காக அரசு நேர்வரிகளை 200 மில்லியனை குறைப்பதா? அரச கொள்வனவை 200 அதிகரிப்பதா? மொத்தக் கேள்வியில் அதிக விரிவாக்க தாக்கத்தை ஏற்படுத்தும் விளக்குக. (4 புள்ளிகள்)

v) அ) சேமிப்பு சமன்பாட்டிற்கும் நுகர்வுச் சமன்பாட்டுக்கும் இடையேயான தொடர்பை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) அரச தலையீடு அற்ற மூடிய பொருளாதாரத்தின் நுகர்வுச் சமன்பாடு $C = 200 + 0.75y$, தன்னிச்சையான செலவீடு 300 மில்லியன் எனின் சமனிலையில் சேமிப்பு மட்டம் எவ்வளவு? (2 புள்ளிகள்)